10.10.2025
Elec.OP. No. 164/2022
**எ.ம.சா.1 – குமார்**

**2–ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :–**

வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை எடுத்து வந்துள்ளேன். 11–ஆவது வார்டில் போட்டியிட்ட 7 வேட்பாளர்களின் வேட்பு மனு உள்ளது. அனைத்து வேட்பாளர்களின் வேட்பு மனுவும் முறையாக பரிசீலனை செய்யப்பட்டுதான் ஏற்கப்பட்டது என்றால் சரிதான். 2–ஆம் எதிர்மனுதாரர்மீது குற்ற வழக்கு இருப்பதாக சொல்லி யாராவது ஆட்சேபனை செய்துள்ளார்களா என்றால் இல்லை. வேட்பு மனு தாக்கல் செய்த தேதியில் இருந்து வெற்றி பெற்றதாக அறிவிக்கும் தேதி வரை யாரும் ஆட்சேபனை இருப்பதாக சொல்லவில்லை என்றால் சரிதான். அனைத்து வேட்பாளர்களுக்கும் கையேடு கொடுக்கப்பட்டுள்ளது. கையேட்டில் ஆட்சேபனை எவ்வாறு தெரிவிக்க வேண்டும் என்பது பற்றி சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எழுத்துப்பூர்வமாகதான் ஆட்சேபனை செய்ய வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கின் சாட்சி ராஜேந்திரன் என்னிடம் எழுத்துப்பூர்வமாக ஆட்சேபனை செய்ததாக சொல்லியுள்ளார், அது சரியா என்றால், அவ்வாறு ஆட்சேபனை எதுவும் கொடுக்கவில்லை. வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டால், தேர்தல் படிவத்தில் அதுகுறித்து சொல்ல வேண்டியதில்லை என்றால், சரிதான். 2–ஆம் எதிர்மனுதாரர்மீது யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத காரணத்தினால், அவருடைய தேர்தல் முறையாகதான் நடைபெற்றது என்றால் சரிதான். அவர் வெற்றி பெற்றது சரியானதுதான்.

**மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை :**

நான் தற்போது பர்கூர் பேரூராட்சி செயல் அலுவலராக பணியாற்றி வருகிறேன். தேர்தல் பணிக்கு முன்பாக உரிய பயிற்சி அளிக்கப்படும் என்றால் சரிதான். வேட்பாளர்களுக்கான விதிமுறைகள் எனக்கு தெரியும். படிவம் 3A–இல் கேட்கப்பட்டுள்ள விவரங்களை வேட்பாளர் கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். முடிந்துபோன வழக்குகள் குறித்து அந்த படிவத்தில் குறிப்பிடப்பட ../

வேண்டியதில்லையா என்றால், குறிப்பிடப்பட வேண்டியதில்லை. முடிந்த வழக்குகளை பற்றி குறிப்பிடப்பட வேண்டியதில்லை என்று படிவம் 3A–இல் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சாட்சி ராஜேந்திரன், 2–ஆம் எதிர்மனுதாரர்மீது குற்ற வழக்கு இருந்து, தண்டனை பெற்றதாக என்னிடம் மனு அளித்தார் என்றால் இல்லை. இந்த வழக்கு பற்றிய விவரங்களை நான் ஆஜரான பிறகு தெரிந்துக்கொண்டேன். தண்டனை குறித்த விவரங்களை, படிவம் 3A–இல் 2–ஆம் எதிர்மனுதாரர் குறிப்பிடவில்லை என்பதை இந்த வழக்கில் ஆஜரான பிறகு தெரிந்துக்கொண்டேன். அவ்வாறு தெரிந்த பிறகு, நான் நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை. அவ்வாறு எடுப்பதற்கான அதிகாரம் எனக்கில்லை. படிவம் 3A–இல் தவறான தகவல்களை தந்திருந்தால் அவருடைய வெற்றி கேள்விக்குறியாகும் என்றால் சரிதான். பிரதிநிதித்துவச் சட்டத்தின்கீழ் குற்றம் செய்த ஒரு நபர், குற்றம் செய்ததாக பின்பு கண்டறியப்பட்டால், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால், அவ்வாறு எதுவும் கண்டறியப்படவில்லை. சாட்சி ராஜேந்திரன் என்னிடம் எழுத்துப்பூர்வமான புகார் கொடுத்த பிறகும், நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2–ஆம் எதிர்மனுதாரர் முறைகேடு செய்துதான் வெற்றி பெற்றுள்ளார் என்ற விவரத்தை, ராஜேந்திரன் என்பவர் என்னுடைய கவனத்திற்கு எடுத்து வந்தும், நான் நடவடிக்கை எதுவும் எடுக்காமல் பொய்யாக சாட்சிய வாக்குமூலம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2–ஆம் எதிர்மனுதாரர் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர் என்பதால், அவருடன் கூட்டு சேர்ந்துக்கொண்டு, ஒரு பொய்யான வாக்குமூலத்தை அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> : இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

CHRISTOPHER M

Digitally signed by CHRISTOPHER M
Date: 2025.10.10 16:42:33 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.